விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்கழி 14 ஆங். ஆங்கிர பிறை 11 இதழ்: 248
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 29-12-1990

## கடந்த ஏழு மாதகாலத்தில் கிழக்கில் பெரும் அட்டூழியம்: 8000 தமிழர்கள் கொலை!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த ஏழு மாதங்களில் சுமார் எண்ணாயிரம் தமிழர்கள் கொலைப்பட்டும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளதாகவும் அங்கிருந்துவந்த சில முக்கிய பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டமே கோர அழிவுக்கு உட்பட்டதாகவும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 8000ற்கு அதிகமாயிருக்கலாமென்றும் நிலைமை சுமுகமாகி கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டால் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கிடைக்குமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில சத்துருக்

(2-ம் பக்கம் பார்க்க)

# ★ 31-ம் திகதி நள்ளிரவு முதல் விடுதலைப்புலிகள் காலவரையற்ற யுத்த நிறுத்தம்

## பேச்சுக்களுக்கும் தயார்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் 31ம் திகதி திங்கள் நள்ளிரவிலிருந்து காலவரையற்ற யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். இலங்கை அரசும் இதனை ஏற்றுக்கொள்ளுமானால் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவும் புலிகள் தயாராயுள்ளனர். அரசு போர் நடவடிக்கைகளைத் தொடருமாயின் புலிகளின் தேசிய விடுதலை இராணுவம் எதிர்த் தாக்குதலை நடாத்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 31ம் திகதி நள்ளிரவிலிருந்து காலவரையற்ற போர்நிறுத்தத்தை கடைப்பிடிக்க தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது. பிறக்கும் புத்தாண்டிலிருந்து சிங்கள ஆயுதப்படைகளுக்கு எதிரான சகல போர் நடவடிக்கைகளும் நிறுத்தப்படும்.

தமிழீழத்தின் சமாதானத்தையும சகஜநிலையையும் உருவாக்கும் ஓர் நல்லெண்ண நோக்கத்துடன் ஒருதலைப்பட்சமான முறையில் காலவரையற்ற போர் நிறுத்தத்தை நாம் பிரகடனம் செய்கிறோம். ஆனால் அதேவேளை எமது சமாதான முயற்சியை நிராகரித்து

(2-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை தாக்குதலில் 10 இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியிலுள்ள வெல்லாவெளியிலுள்ள பக்கி எல்ல முகாமிலிருந்து 35-ஆம் கொலனிக்கு வந்த படை

(4-ம் பக்கம் பார்க்க)

## 10 பெண்கள் கைது வயோதிபர் சுட்டுக்கொலை

(அம்பாறை)

ரோந்துசென்ற படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளன.

லொறிவண்டி ஒன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் பலத்த தாக்குதலை நடத்தியபோது 10 இராணுவத்தினர் ஸ்தலத்திலே பலியாகினர். காயமடைந்த பல இராணுவத்தி

(2ம் பக்கம் பார்க்க)

## பரவலான விமான தாக்குதல் வடமராட்சியில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் பல பகுதிகளில் நேற்றுக் காலை நடைபெற்ற பலத்த விமானக் குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

ஊறணி, வல்வெட்டித்துறை, ஊரிக்காடு, சக்கோட்டை, பொலிகண்டி, தொண்டமானாறு, பகுதிகளில் இத்தாக்குதல் நடைபெற்றது.

தொண்டமானாறில் ஆர். வடிவேலு என்பவர் இவ் விமானக் குண்டுத் தாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## உணவுப்பொருட்கள் வந்தன விலை குறைகிறது

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை பதினைந்து லொறிகளில் உணவுப்பொருட்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்ததையடுத்து சீனி, மா, மண்ணெண்ணை, பிஸ்கட், சவர்க்காரங்கள் திடீரென விலைகள் வீழ்ச்சியடைந்தன.

தேங்காயின் விலையும் இறங்கி வருகிறது. மேலும்பல லொறிகள் உணவுப் பொருள்களுடன் வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(எஸ்)

## தமிழர் மூவர் சுட்டு, வெட்டி கொலை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 40-வது கொலனியை சுற்றிவளைத்தரெலோ, புளொட், இராணுவத்தினர் பத்து பெண்களை கைதுசெய்து கொண்டுசென்று பாலியல் வன்முறைக் குட்படுத்தியுள்ளனர்.

இவர்களில் 12 வயதுச்சிறுமிகளான சி. சுசிலா, யோ.

(2-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சவளக்கடை இராணுவ முகாமை சேர்ந்த இராணுவத்தினர் மண்டூர் ப. நோ. கூ. சங்கத்தில் ஆயுத முனையில் 100நெல் மூடைகளை அபகரித்து சென்றுள்ளனர்.

கடந்த 25ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுளது.

(வி-க)

## அமெரிக்க மத குருவும் கிழக்கில் காணமல் போனர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்தவ மதகுருமார்கள் பலர் காணமல்போவதாக தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க மதகுருவான வண. கோபயர் என்பவரும் காணமல் போயுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இராணுவநடவடிக்கையால் மோசமாக பாதிக்கப்பட்ட

[2-ம் பக்கம் பார்க்க]

## சீன யுத்த விமானங்களில் இல. விமானிகளுக்குப்பயிற்சி

(கொழும்பு)

இலங்கை விமானப்படை விமானிகளுக்கு சீன யுத்த விமானங்களில் பயிற்சியளிக்கப்படவுள்ளது. அடுத்த சில

(2ம் பக்கம் பார்க்க)

## ஏரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதுவருட, தைப்பொங்கல் வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல 56, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-4158)

### ENGLISH CLASS

O/L English Credlts Tuition Spoken and Written English for adults by Experienced Teacher Nathan B Sc. 85, Sivankoviladi, Tirunelveli.

(சி-4209)


# நத்தார் வெடியில் கடற்படை அலர்ஜி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் நத்தார் பண்டிகைக்கு சிறுவர்கள் கொளுத்திய பட்டாசு வெடிச் சத்தத்தினை அடுத்து நயினாதீவு பக்கமாக இருந்துவந்த பீரங்கிப்படகு அப்பகுதிக்கடலில் துப்பாக்கி சூட்டினை மேற்கொண்டுள்ளது.

இப்படகு புங்குடுதீவு பல்லதீவு கடல்பக்கமாக வந்து அப்பகுதிகளை நோக்கியும் வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டது.

நத்தார் தினத்தன்று காலை 11 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதே நேரம் தீவுப்பகுதிகளின் கடல்பிராந்தியங்களில் தாழப்பறந்து வட்டமிட்டுச்சென்ற ஹெலியிலிருந்தும் தாக்குதல் நடாத்தப்பட்டது. (101)

# ஜீ. சி. ஈ. பெறுபேறுகள் வேலணைக்கு வந்தன

[வேலணை]

1989-ம் ஆண்டு (க. பொ. த) பரீட்சைக்குத் தோற்றிய புத்தளம், மட்டக்களப்பைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தவறுதலாக வேலணைக்கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சை பெறுபேறுகளை உடனடியாக சம்பந்தப்பட்ட இடங்களுக்கு இங்குள்ள உத்தியோகத்தர்களால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

## ஏகாதசி விழா

(கிளிநொச்சி)

ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தில் நேற்று வைகுந்த ஏகாதசிவிழா இடம் நடைபெற்றது. (83)


## Wanted Immediately

Resident Doctors with M. B. B. S. for the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Salary:- Negotiable.

Apply before:- 5th January 1991.

To:- The Acting Medical Superintendent, Mc Leod Hospital, Inuvil.

(C 4216)

## Wanted Immediately

### Resident Hospital Secretary

Wanted Resident Hospital Secretary for Mc Leod Hospital Inuvil with experience in Accounts and administration preferably with Typing knowledge

Age:- Between 45 - 55 Years.

Salary:- Negotiable

Apply before:- 5th January 1991.

Apply to:-

Acting Medical Superintendent,
Mc Leod Hospital, Inuvil.

(C 4215)

## NEW SCIENCE ACADEMY

KANNATHIDY ROAD, JAFFNA

**90 A/L Chemistry Paper Physical**

Tuesday, Thursday 4-00 - 5-30 p. m.

**91 A/L Organic**

Wednesday, Thursday 2-30 - 4-00 p. m.

by

**சண்**

**91 A/L Heat**

ஆரம்பம்: 29-12-90 - SAT 4-00 P. M

**92 A/L Light**

ஆரம்பம்: 29-12-90 SAT

பிரிவு I - 3-00 P. M.

பிரிவு II - 5-00 P. M

BY

**சோதிலிங்கம்**

(சி-4217)


# தீவுப் பகுதிகளில் பத்திரிகைகளுக்குத் தடை

(வேலணை)

தீவுப்பகுதிகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய இடங்களுக்கு செய்திப் பத்திரிகைகள் கொண்டு செல்வது கடற்படையினரால் நடைசெய்யப்பட்டுள்ளது.

இக்கட்டுப்பாடுகளை மீறி யாரும் தெரிந்தோ தெரியாமல் பத்திரிகைகளை கொண்டு சென்றால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் கடற்படையினர் எச்சரித்துள்ளனராம்.

அப்பகுதிகளிலுள்ள மக்கள் நாளாந்த தினசரிப்பத்திரிகைச் செய்திகளைப் பார்க்க மிகவும் ஆவலாக இருப்பதாகவும் ஆனால் பத்திரிகை கிடைப்பதில்லையென கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

## பத்துப் பெண்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் இழப்புக்களுடன் பின்வாங்கினர்.

இத்தாக்குதலில் 5 இராணுவமும் 5 பொலிசாரும் கொல்லப்பட்டதாகவும் அரச தரப்பில தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-க)

## தமிழர் மூவர்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

திலீஸ் ஆகிய பாடசாலை மாணவிகளும் இதில் அடங்குவர்

இதேநாள் தாமோதரம் வைத்திலிங்கம் என்பவரையும் இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது. (வி)

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களுக்கு உதவி வருவதாலேயே இந்த மதகுருமார் காணாமல் போவதாகவும் மேலும் பலரை இராணுவம் தேடிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த வண. கோபயர் என்பவரும், மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வராஜா என்பவரும் கடந்தசில மாதங்களாக காணாமல் போயுள்ளதாகவும், இவர்களை தேடும் முயற்சியில் அமெரிக்க திருச்சபை ஒன்று ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கடந்த ஏழு மாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டான், கிரான்வாழைச்சேனை, கல்முனை பிள்ளையாரடி பகுதிகளே மிகமோசமாக அழிக்கப்பட்டதாகவும் இதனால் நூற்றுக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டு கைக்குழந்தைகளுடன் காடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல பகுதிகளிலுமிருந்து தப்பியோடிவிட்டதாக கருதப்படும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுவிட்டனர். அவர்கள் பற்றி எந்தவிதமான தகவல்களும் குடும்பத்தவர்களுக்கோ, உறவினர்களுக்கோ கிடைக்கவில்லை. இவ்வாறு காணாமல் போனவர்கள் பலர் உயிரோடிருப்பதாகவே குடும்பத்தவர்கள் கூறுவதாகவும் ஆனால் அவர்கள் இனி திரும்பி வரமாட்டார்கள் என்றும் கூறினார்கள்.

கடைகள் உள்ள பகுதியில் பொருட்களின் விலை மிகவும் மலிவாக இருப்பதாகவும் எனினும் அகதிகளிடம் பணம் இல்லாததால் பொருட்களை வேண்ட ஆட்களே இல்லை என்றும் தெரிவித்தனர். தற்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் காடுகளில் உள்ள தமிழர்களின் நிலை நினைத்துப் பார்க்க முடியாததென்றும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

## பயிர்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வீட்டுப்பயிர்கள் பன்றிகளால் நாசம் செய்யப்பட்டுள்ளது

## சீன யுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரங்களில் இப்பயிற்சி ஆரம்பமாகும்.

சீனாவிலிருந்து புதிதாக பல நவீனரக யுத்த விமானங்கள் வெகுவிரைவில் இலங்கை வந்துசேரவுள்ளது.

சீனப்பிரதமரின் இலங்கை விஜயத்தின்போது விமானங்களும், பெருமளவு ஆயுதங்களும வழங்குவதற்கான இணக்கமும் காணப்பட்டுள்ளதாம். (சி)

## 31-ம் திகதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிறிலங்கா அரசு போர்நடவடிக்கைகளை தொடருமாயின எமது தேசிய விடுதலை இராணுவம் எதிர்த்து தாக்குதல்களை நடத்த தயங்கமாட்டாது. தமிழீழமக்களுக்கு எதிராக யுத்தத்தைத் தொடர்வதா அல்லது சமாதானத்தை கடைப்பிடிப்பதா என்ற தீர்மானத்தை மேற்கொள்ளும் பொறுப்பு சிறிலங்கா அரசிடம் விடப்பட்டிருக்கிறது.

சிறிலங்கா அரசு உண்மையில் சமாதானத்தை விரும்புகிறதா இல்லையா என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட நாம் அவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறோம். எமது போர்நிறுத்தப் பிரகடனத்தை ஏற்று சிறிலங்கா அரசு யுத்த நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

யுத்தம் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு இனப்படுகொலையை நடத்திவருகிறது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அகதிமுகாம்களிலும் காடுகளிலும் அவலப்பட்டு வரும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை தடுத்துவைத்திருக்கிறது. போரை சாக்காக வைத்து அரசு சார்பற்ற உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இப்பகுதிகளுக்குச் செல்ல தடைவிதித்திருக்கிறது.

உலகத்திற்கு தெரியாமல் மௌனமாக தினமும் செத்து மடியும் இம்மக்களின் அவலநிலையை உலகிற்கு எடுத்துக் காட்டவும் அவர்களுக்கு உதவும் நோக்கமாக நாம் போர் நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளோம்.

ஒருதலைப்பட்சமாக நாம் பிரகடனம் செய்யும் போர் நிறுத்த அறிவித்தலை சிறிலங்கா அரசு கவனமாக பரிசீலனை செய்து உகந்த முடிவை எடுக்குமென நம்புகிறோம். (வி)

## இராசி பலன்

29-12-1990

சனிக்கிழமை

துவாதசி முற்பகல் 8-12 வரை. ஏகாதசி வைகறை 5-57 வரை கார்த்திகை பிற்பகல் 12-45 வரை இராகு காலம் 9-28 முதல் 10-58 வரை. அமிர்தயோகம், சனிப் பிரதோச விரதம். நல்ல நேரம் மாலை 3-28 முதல் 4-58 வரை.

மேடம்- புதிய திருப்பம், பொருளாதார மேம்பாடு, வாழ்க்கை வசதி. தொழில் குறைவு. அகால போசனம்.

இடபம்- வாழ்க்கைப் போராட்டம், தொழில்லாபம், சகோதர உதவி, பண வசதி, பயணம்.

மிதுனம்- உல்லாசப்பயணம், குடும்பக் கவலை, இலாபவரவு. தொழில் பாதிப்பு, காரியத் தடை.

கடகம்-கருத்து முரண்பாடு, கடன் வரவு, அந்நிய வாசம், வீண் விரோதம், மறைமுக எதிர்ப்பு.

சிங்கம்- காரியத் தாமதம், நிறைவேறாத ஆசைகள், பணக் குறைவு தொழில் போட்டி கவலையீனம்.

கன்னி- அதிர்ஷ்டக்குறைவு, நண்பர் விரோதம். வயிற்றில் ரோகம். பழைய நினைவுகள்.

துலாம்- ஏமாற்றம். பயனற்ற செயல். மனைவியால் துன்பம். அதிக யோசனை. தடுமாற்றம்.

விருச்சிகம்- புதிய தொழில் முயற்சி. காரிய வெற்றி குடும்ப சந்தோஷம், பொதுப் பணி.

தனுசு- அகங்காரம், குடும்பத்தில் சுபகாரியம். காரிய வெற்றி. எதிர்பாராத உதவி. புகழ்.

மகரம்- தியாக சிந்தை. கடும் போக்கு. கைப்பொருள் நழுவல். பயணங்களால் செலவு. குடும்பப் பிரிவு.

கும்பம்- புத்திரர் கவலை. தொழில்போட்டி, அதிகாரிகள் குறைகேட்டல். பணச்செலவு

மீனம்- காரியபலிதம். பண வரவு. தொழில் மாற்றம். குடும்ப மகிழ்ச்சி. கருத்து மோதல்.

'ஜோஸ்யர்'

## இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்

ஈழத்தமிழர் பிரச்சனையில் இலங்கை அரசைத் தட்டிக் கேட்டும் தனிப் பொறுப்பை தானே எடுத்துக் கொண்ட, இந்திய அரசை, மட்டம் தட்டி, இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹறோல்ட் ஹேரத் அறிக்கை வெளியிட்டுள்ளார்!

"எந்த நாட்டிடமும் இருந்து உதவிபெறும் உரிமை எமக்குண்டு: யாரிடமிருந்து உதவி பெறுவது என்பது பற்றி வேறு எவரும் எமக்குச் சொல்லத்தேவையில்லை" இவ்வாறு அமைச்சர் ஹேரத் இந்தியாவுக்குப் பதிலடி கொடுத்துவிட்டார்.

இலங்கையில் அரசியலில் அநாகரிகமும், இராணுவ அசுரத்தனமும் என்றுமில்லாத அளவுக்கு தலைவிரித் தாடிக் கொண்டிருப்பது தெரிந்தும், திட்டமிட்டு ராஜரீக மௌனம் சாதித்து வரும் இந்திய அரசுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்!

ஈழத்தமிழர் பிரச்சனையில் இந்திய அரசின் தவறான அணுகுமுறை காரணமாகவே விடுதலைப் புலிகளுக்கும் இந்திய படைகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பழி வாங்கப்பட்டு பிரச்சனை மேலும் சிக்கலாக்கி இறுதியில் இந்தியப்படை நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது!

இலங்கை பிரச்சனையில், வேறு எந்த வெளி நாட்டுச் சக்திகளும் தலையிட அனுமதிக்காது என்று வாயளவில் மட்டும் அடித்துக்கூறும் இந்தியாவுக்கு இப்பிரச்சனையை சரியான முறையில் அணுகுவதற்கு மனமும் இல்லை. அதேவேளையில் அந்நிய சக்திகளின் மறைமுக நேரடித் தலையீடுகளைத் தட்டிக் கேட்கும் துணிவும் இல்லை

தமிழகத்தில் மட்டும், புதிய பாரதப் பிரதமர் "ஈழத்தமிழ் போராளிகள் நடமாட்டம் குறித்து தமிழக அரசு தவறான அணுகுமுறை கையாளுகிறது என்ற பலரின் குற்றச்சாட்டைக் கருத்தில் கொண்டு நடந்து கொள்ள வேண்டும் என்று மறைமுக எச்சரிக்கை விடுத்து தனது சட்டாம் பிள்ளைத் தனத்தைகாட்டியுள்ளார்

தமிழக அரசும், தனது மாநில அரசு கலைக்கப் பட்டு விடுமே, என்ற அச்சத்தில் ஈழத்தமிழ் போராளிகளின் போராட்டத்திற்கு மாசு கற்பித்துதப்புத் தாளங்கள் போடத் தொடங்கிவிட்டது!

இடம்கண்ட இடத்தில் தனது சட்டாம் பிள்ளைத் தனத்தைக் காட்டத் துணியும் இந்திய அரசு சர்வதேச அரசியல் களத்தில் சின்னஞ்சிறிய இலங்கைத் தீவினால் மட்டம் தட்டப்படுவது இன்னும் உறைக்கவில்லை போலும்!

— மயூரன்.

# உலக நாடுகள் எங்கும் தமிழர்; ஆனால்

# தமிழர்களுக்கென ஒரு 'நாடு' இல்லை!

இன்னொரு நாடு எமக்காக வந்து போராடும் என்பது சாத்தியப்படாததொன்றாகும். வாழ்வா சாவா என்ற இறுதிப் போராட்டமே இன்று தமிழினத்தின் சுதந்திரப் போராகும்.

எமது மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் நான் விடுக்கும் பணிவான வேண்டுகோள் இது.

பூமியில் மனித வாழ்க்கை மிகக் குறுகிய காலமே. நாம் யாழ். மக்களையும் மண்ணையும் பாதுகாத்துப் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இங்குள்ள

**(கொழும்புத்துறை மேற்குசனசமூக நிலையத்தில் நடந்த கப்டன் காந்தியின் (க. செல்வகுமார்) 3-வது நினைவு தின கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மகளிர் அவை உறுப்பினர் செல்வி வின்ஜா நிகழ்த்திய உரை.)**

இலங்கையில் வேறு நாடு ஆதிக்கம் செலுத்தி விடுமோ என்ற அச்சத்தில் எமக்கு உணவு போடுவதாகச் சொல்லிக்கொண்டு வந்த இந்திய அரசு எமது போராட்டத்தை சீர்குலைக்க, அழித்தொழிக்க முயற்சித்தது. இதனாலேயே காந்தி போன்ற பல இலட்சிய வேங்கைகள் வீரமரணமடைந்தனர். இந்த உண்மைகளை காலங்கடந்தே எமது மக்கள் உணர்ந்தனர்.

இன விடுதலைப் போரை மழுங்கடிப்பதற்காக தமிழ்க் குழுக்களுக்கு உதவி செய்து தமிழரைக்கொண்டு தமிழரை அழிக்கும் திட்டத்தை முதலில் இந்தியாவே காட்டிக்கொடுத்தது. இந்த வலையில் சிக்கியவர்கள் புலிகளை அழிக்கவில்லை: பசிக்கு உணவு கொடுத்த மக்களை, தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்த மக்களை தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்த தாய்மாரை, விடுதலை உணர்வினால் வாய் திறந்து பேசிய சகோதரர்களையே கொன்று குவித்தனர். இதை எம்மினம் நன்கு உணரவேண்டும்.

உலக நாடு முழுவதும் தமிழ் இனம் வாழ்கிறது. ஆனால் தமிழினத்துக்கென ஒரு நாடு இல்லை. தமிழ் ஈழ மண் எமது மண் இங்கேதான் நாம் தமிழ் அரசை உருவாக்க முடியும் உருவாக்கவேண்டும் வெளிநாடுகளுக்கு ஓடிச் சென்று அந்நிய நாட்டவருக்கு எமது மனித சக்தியை விற்று கூட்டில் வாழ்ந்து கொண்டு அடிமைச் சீவியம் நடத்துபவர்கள் பற்றி நாம் கவலைப்படமுடியாது. அப்படியான பகட்டு வாழ்க்கை போல் வாழ்க்கை வாழ்வதை விட இந்த மண்ணில் தியாகிகளாக மடிந்து எமது எதிர்கால சமுதாயத்தின் விடிவுக்காக சுதந்திர தமிழ் ஈழத்தை உருவாக்க முனைவது மேலா

இந்த வாழ்நாளில் கோழைகளாக வாழ்வதைவிட நல்லதைச் செய்து நாட்டுக்காக நம் இனத்திற்காக வாழ்வதே

**பூமியில்**

**மனித வாழ்க்கை**

**மிக குறுகிய காலமே.**

**வாழ்நாளில்**

**கோழைகளாக**

**வாழ்வதைவிட,**

**நாட்டுக்காக,**

**இனத்திற்காக**

**வாழ்வதே சிறந்தது.**

உயர்ந்தது யாழ்ப்பாண மண்ணையும் மக்களையும் பாதுகாக்கும் கடமை இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கே உரியது. இன்று அல்லற்பட்டுக் கொண்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டு வாழ்க்கை நடத்தும் கிழக்கு மாகாண மக்களையும் மண்ணையும், பாதுகாக்க வேண்டிய வேங்கைகள் பலர் தமது மண்ணில் தமது மக்கள் சித்திரவதைப்படும் போதும்

## செல்வி வின்ஜா

இளைஞர்கள், யுவதிகள் போராட்டத்தில் பங்குகொள்ளாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலையைக் காண்கின்றோம்.

இந்த நிலை உடனடியாக மாறவேண்டும். எமது மண்ணில் அந்நியரை நுழையவிட்டால் நீங்கள் அநியாயமாக பயனற்ற மரணங்களைத்தான் தழுவிக்கொள்ள நேரிடும். உங்கள் குடும்பங்களையே காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டு விடும். இதை நீங்கள் உணராவிட்டால் இதுபோன்ற அஞ்சலிக் கூட்டங்களை நடத்துவதில் அர்த்தம் இருக்க முடியாது. மறைந்த தியாகிகளின் இலட்சியங்கள் நிறைவேற முடியாது. (123)

# என்ன சங்கதி?

வழி, தெருவெல்லாம் இப்போது சிறு சிறு கடைகள் தட்டுப்பாடான பொருட்கள் இக்கடைகளில் நிறைந்திருக்கின்றன.

என்னைக்கடந்து சென்ற ஒருவர் சைக்கிளை நிறுத்துகிறார் அப்படியான கடை ஒன்றைப் பார்க்கிறார்.

கடைக்குச்சென்று சீனி, மைசூர், பயறு விலைகளை கேட்கிறார். விலைகள் எல்லாம் வழக்கத்திற்குமாறு!

அவரது கண்கள், கடையில் உள்ள பொருட்கள் வட்டமிடுகின்றன. அவர் தேடித்திரிந்த சவர்க்காரம் அங்கு தெரிந்தது.

விலையைக் கேட்டார். சற்று அதிகம் தான்.

இந்தச் சோப்புக்காக எத்தனை கடைகள் ஏறி இறங்கி எத்தனை வீதிகள் சுற்றியலைந்து வந்தவருக்கு இந்த விலை பெரிதல்ல.

கேட்ட பணத்தைக் கொடுத்தார். கடைக்காரர் உள்ளே சென்றார், உடன் திரும்பி வந்தார். முழுக்கட்டியொன்றில் வெட்டியெடுத்த பாதி சோப்பை நீட்டினார்.

வந்தவர் சிலையானார்! வாங்காமல் திரும்பினார்.

'ஊரோடி'

## திருவெம்பாவை உற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக்கல்லூரி சிவஞான வைரவர் கோவிலில் திருவெம்பாவை பூசை தினமும் நடைபெற்று வருகின்றது. [ரி]

## இளிநொச்சி குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளதால் தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரதொடங்கி உள்ளனர்.

பெரியகுளம், பிரமந்தனாறு குளம், புதுமுறிப்பு குளம், கந்தன்குளம், அக்கராயன் குளம், கிளிநொச்சிகுளம், புதிய ஐயன்குளம், ஆகியனவற்றில் வெள்ளம் நிரம்பி வழிகிறது.

இரணைமடுக்குளத்தின் நீர் மட்டமும் உயர்ந்து வருவதனையும் அவதானிக்க கூடியதாக இருக்கிறது. [83]

## நயினாதீவில் திருவெம்பா பஜனைக்கு படையினர் தடை

(வேலணை)

நயினாதீவில் திருவெம்பா பூசை வழிபாடுகள் பஜனை செய்வதற்கு அங்குள்ள ஸ்ரீலங்கா கடற்படையினர் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றனராம்.

அவ்வாறு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் பின்வருமாறு அடங்கின்றன.

அங்குள்ள ஆலயங்களில் காலை ஐந்து மணிக்குப்பின்னர்தான் பூசை வழிபாடுகள் செய்யவேண்டும்.

கிராமங்களில் அதிகாலையில் மேற்கொள்ளப்படும் கூட்டுப் பஜனைக்கோஷ்டியாக செல்வது தவிர்க்கப்படல்வேண்டும்.

இதற்கும் அவர்கள் காரணம் தெரிவித்துள்ளார்களாம்.

இரவில் ஸ்ரீலங்கா கடற்படையைச்சேர்ந்த சிப்பாய்கள் கிராமங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் சில வேளைகளில் இனம் தெரியாமல் பஜனைக் கோஷ்டியினரை நோக்கி தாக்குதல்களில் ஈடுபட நேரிடலாம் என்ற காரணங்களாலேயே இவற்றைத் தடைசெய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

## யானைகள் நடமாட்டம்

(பூநகரி)

பூநகரி - மன்னார் வீதியில் இரவுநேரங்களில் யானைகளின் நடமாட்டங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இப்பகுதியிலுள்ள 12-ஆம் கட்டையிலுள்ள விவசாய நிலங்களில் செழிப்புற்றுக் காணப்பட்ட பயிர்கள் இந்த யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளதுடன், பூநகரி ஜெயபுரம் வாசி ஒருவரும் அண்மையில் யானையினால் தாக்கப்பட்டு மரணமானார்.

## பலதும் பத்தும்

### ம. பொ. சி.யின் மயக்கம்!

முன்னர் ஒருதடவை யாழ்ப்பாணத்துக்கு வந்த ம. பொ. சி.க்கு அதிர்ச்சி தரக்கூடிய சம்பவம் நிகழ்ந்ததாம். அவர் அதைத் தாம் கலந்துகொண்ட கூட்டத்தில் தெளிவுபடுத்தினார்:

"நான் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வீட்டில் அன்பர் ஒருவர் வந்து என்னிடம் "நாங்கள் சாப்பிடலாமா?" என்று கேட்டார். எனக்கோ உள்ளூர வருத்தம். என்னடா விருந்தாளி நான் வந்திருக்கிறேன். என்னை விட்டுவிட்டுச் சாப்பிடுவது மட்டுமல்ல, என்னிடமே சொல்லி அனுமதி கேட்கிறார்களே" எனக் கெட்ட கோபம்தான் வந்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு "ஆஹா தாராளமாக என்றேன்."

உள்ளே சென்று திரும்பிய அன்பர் "சாப்பிட அழைத்தோமே" என்றார். அப்போதுதான் எனக்கு மயக்கம் தெளிந்தது அன்பர் "நாங்கள் சாப்பிடலாமா!" எனக் கேட்டது என்னையும் சேர்த்துக் கூறியிருக்கிறார் என்பது புரிந்தது.

- ஞானி

## சுட்டு வீழ்த்தப்பட்ட
# பொம்மர் விமானியின் மனைவி புலம்பல்

[கொழும்பு]

கடந்த செப்டம்பர் மாதம் பண்ணைக்கடலில் விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட பொம்மர் விமானியின் மனைவி ''சொறி சொல்லியா உங்களைச் சுட்டார்கள்...'' என்று அழுது புலம்பியவாறு இருக்கிறாராம்.

இந்த பொம்மர் விமானி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பல தடவைகள் குண்டு போடும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்.

குண்டு போடும் ஒவ்வொரு தடவையும் சொறி சொல்லிவிட்டுத்தான் அவர் குண்டு போடுவாராம்

இதனை அவர் தனது மனைவியிடம் சொல்லியிருந்தார். அதனால்தான் அவர் ''சொறி சொல்லிவிட்டு நீங்கள் குண்டு போடுவீர்கள். உங்களைச் சுட்டு வீழ்த்தும்போது சொறி சொல்லிவிட்டா சுட்டார்கள்'' என்று தேம்பி அழுதாவறு நடைப்பிணமாக உலாவி வருகிறார்

இந்த விமானி இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் திருமணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

---

ஜனவரியில்

# 15,000 ஆசிரியர் நியமனம் 8,000 ஆசிரியர் ஓய்வு

(கொழும்பு)

அடுத்தாண்டு நாடுபூராவும் பதினையாயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்யக் கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டப்படி 8000 ஆசிரியர்கள் பதவி விலக முன்வந்ததையடுத்து இந்நியமனங்களைக் கல்விச்சேவை ஆணைக்குழு வழங்க முடிவுசெய்துள்ளது.

கடந்த செப்டம்பரில் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 15,000 ஆங்கிலஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் நியமனம் வழங்கப் படவுள்ளது. இப்பரீட்சை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறாமையால் தமிழ்ப்பகுதிகளில் எவரும் நியமனம் பெறமாட்டார்கள்.

இவற்றைவிட 5000 கணித, விஞ்ஞான ஆசிரியர்களும் நியமனம் செய்யப்படவுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழுச் செயலர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் நிருபர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் 3,500 ஆங்கில ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளிலும், நிறுவனங்களிலும், ரெலிக் பயிற்சி பெற்றவர்களிலிருந்தும் தெரிவு செய்யப்படவுள்ளனர். (எஸ்)

---

# இவர்களது நடவடிக்கை ராணுவத்தையும்மிஞ்சுகிறது

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினதும் தமிழ் இயக்கங்களினதும் நடவடிக்கை இராணுவத்தின் அடாவடித்தனத்தையும் மிஞ்சியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பல்வேறு சம்பவங்களில் இராணுவத்துடன் வரும் எம்மவர்களும் முஸ்லிம் ஊர்காவல் படையும் மிக மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் பாதிக்கப்பட்ட பலர் தெரிவித்துள்ளனர்.

சில சமயங்களில் முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் எம்மவரையும் இராணுவம் அடக்கி அவ்விடத்தைவிட்டு அகற்றியதாகவும் பலர் தெரிவித்துள்ளனர். (சி)

---

## இராணுவ அச்சுறுத்தலால்
# மன்னார் கடற்றொழிலாளர் தீவுப்பகுதிக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பேசாலை சரிசல் தாழ்வுபாடு முதலிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்களின் கடல் தொழிலை மேற்கொள்வதற்காக தீவுப்பகுதிக்கு வந்துள்ளனர்.

தீவுப் பகுதியிலுள்ள குறுங் கடல்களில் தீவுப்பகுதி கடற் தொழிலாளர்களுடன்சேர்ந்து இவர்கள் விடுவலையில் மீன் பிடித்துவருகின்றார்கள்.

மன்னார் கடலோரங்களில் மீன் பிடிப்பது கடந்த 20ம் திகதி முதல் ஸ்ரீலங்கா அரசு தடைவிதித்துள்ளதாக அறியப்படுகிறது.

இதேவேளை தீவுப் பகுதியில் பாலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பெருங்கடல்களில் பீரங்கி கப்பல் நிற்பதால் மீனவர்கள் சுருவில், தம்பாட்டி, மெலிஞ்சுமுனை ஆகிய இடங்களிலுள்ளகுடாக்கடல், குறுங்கடல் ஆகியவற்றிற்கு சென்று வீச்சு வலைகளில் மீன் பிடித்து வருகிறார்கள்.

நான்கு மாத காலமாக பெருங் கடலில் மீன்பிடிக்காத காரணத்தால் மீன்கள் குடாக் கடலை நாடிவருவதாக மீனவர்கள் தெரிவித்தார்கள்.

---

# கடலில் மிதக்கும் ஆணின் சடலம்

(சித்தன்கேணி)

சுழிபுரம் திருவடிநிலைக் கடலில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் மிதந்து சென்றது.

சுழிபுரம் திருவடிநிலைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள். நடுத்தர வயதுள்ள ஆணின் சடலமொன்று கடலில் மிதப்பதைக் கண்டனர். சடலத்தைக் கட்டி இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்த மீனவர்கள் சடலத்தை அடையாளம் காண அப்பகுதிப் பொதுமககளால் இயலாமையால் மீண்டும் சடலத்தைக் கொண்டுபோய்கடலில்மிதக்கவிட்டுள்ளனர். (137)

---

# நாளை கலைஞர்களுக்கான கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் கலை,கலாசாரப் பிரிவும், நிதர்சன ஒளிபரப்புச் சேவையும் இணைந்து நடாத்தும் தமிழீழக் கலைஞர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல நாடகக் கலைஞர்களையும், நடிகர், நடிகைகள்,பாடகர்கள், இயக்குநர்கள்,நாடக பிரதியாக்குநர்கள், நடனக் கலைஞர்கள் ஆகிய அனைவரையும் தவறாது சமுகம் தந்து தங்கள் மேலான கருத்துக்களை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தமிழீழத்தில் கலைஞர்களின் எதிர்காலத் திட்டமொன்றை வகுக்கவும் போராட்டத்துடன் இணைந்து பங்களிப்புச் செய்யவும் உங்கள் வரவும், கருத்தும் அவசியமாகின்ற காரணத்தால் அனைத்துக் கலைஞர்களும் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

---

# தபால்கள் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில்சேகரிக்கப்பட்ட 114தபால் பொதிகள் குமண கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை நேற்று யாழ்ப்பாண தபாலகத்தில் இருந்து பருத்தித்துறைக்கு செஞ்சிலுவைச் சங்க லொறிகள் மூலம், அனுப்பிவைக்கப்பட்டு கப்பலில் சென்றடைந்தன.

---

# வவுனியா செல்ல பொதுமக்கள் அச்சம்

(கிளிநொச்சி)

வவுனியாவில் இராணுவ கெடுபிடி அதிகரித்துள்ளது. இதனால் பயணிகளும் பொதுமக்களும் வவனியா நகருக்கு செல்ல பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

வவனியாவிற்கு சென்ற வியாபாரிகள் சிலர் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்தும் உள்ளனர் பலர் இராணுவத்தால் தாக்கப்பட்டு காயமடைந்தனர் எனவும பயணிகள் சிலர் கைதாகியும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (33)

---

# இன்று ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கத்தோலிக்க இலக்கிய வட்டம் ஒளிவிழாவையும், நூலறிமுகவிழாவையும் இணைத்து இன்று நடாத்துகின்றது.

மேற்படி வைபவம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் தொடர்பகம் மண்டபத்தில் திரு. துரை ஆரோக்கியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (வி)

---

# 'ரெலோ' உறுப்பினர் ஐவர் மதுரையில் கைது

[சென்னை]

ரெலோ அமைப்பைச் சேர்ந்த ஐவர் நேற்றுமுன்தினம் மதுரையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மதுரை பெரியார் நகரிலுள்ள வீடொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவர்கள் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழகத்தில் இதுவரையும் 174 ரெலோ உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளாரர்களாம். [ரி]

---

### பரவலான

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலில் பலியானார். அவரது வீடும் சேதமடைந்தது. வல்வெட்டித்துறையில் எஸ். சந்திரசேகரம் (65 வயது)எஸ். உதயகுமார் [35 வயது), எஸ். மலர்விழி (28 வயது), விஜயா (20 வயது)ஆகியோர் படுகாயமடைந்தனர்.

ஊறணியில் இடம்பெற்ற தாக்குதலில் கடை ஒன்றும், 5 படகுகளும் முற்றாகச் சேதமடைந்தன. சக்கோட்டையில் துரைராஜா (வயது 42], மகவிரி. வசந்தி ஆகியோர் படுகாயமடைந்தனர். செல்லத்துரை என்பவரது வீடு முற்றாகச் சேதமடைந்தது.

நேற்றுக்காலை 6-45 மணி முதல் 10-45 மணி வரை குண்டுத் தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதலில் இரு ஹெலிகள், ஒரு அவ்ரோ, இரு பொம்மர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் கட்டிடங்கள், கடைகள், பத்து வீடுகளும் பலத்த சேதமடைந்தன. (வி-க)

---

### அம்பாறை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யினர் நேற்றுமுன்தினம் இரு தமிழர்களை சுட்டும் வெட்டியும் கொலை செய்தனர்.

துரைச்சாமி (வயது 80), பொன்னையா (வயது 60) ஆகியோரே கொலை செய்யப்பட்டனர்.

நத்தார் தினத்தன்று திருப்பழுகாமத்தில் இளையதம்பி ராசா (வயது 60) என்பவரை பொதுமக்கள் முன்னிலையில் இராணுவத்தினர் சுட்டும். வெட்டியும் கொலைசெய்தனர். (வி)

---

# கிரிக்கெட் ஆசிய கிண்ணம்: இலங்கை வெற்றி

[கட்டாக்]

'ஆசிய கிண்ண' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையணி 36 ஓட்டங்களால் இந்தியாவை தோற்கடித்தது.

முதலில் ஆடிய இலங்கை அணி 49.2 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. அர்ச்சுனா ரணதுங்கா 52 ஓட்டங்களைப்பெற்றார்.

இந்திய அணி 45.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றது. அஸாருதீன் 40 ஓட்டங்களைப்பெற்றார். நாளை இலங்கை, பங்களாதேசை எதிர்த்து ஆடும். (சி)

---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி. 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.